DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI

S.C.32/2021

Deposition of Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கங்காதேவி | த/பெயர் | : ராஜேந்திரன் |
| ஊர் | : கடமலைக்குண்டு | தாலுகா | : ஆண்டிபட்டி தாலுகா |
| சாதி | : -- | தொழில் | :விவசாயம் |
| மதம் | : இந்து | வயது | :50/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2022

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் கடமலைக்குண்டில் வசித்து வருகிறேன் . எதிரிகளை தெரியும் . என் தம்பி செல்லப்பாண்டி எதிரி சித்திராவை திருமணம் செய்திருந்தார்.கடமலைக்குண்டில் தனிக்குடித்தனம் செய்து வந்தனர் . கணவன் மனைவிக்கு இடையே சிறு சிறு சண்டை சச்சரவுகள் இருந்து வந்தது . எதிரி மகாராஜன் சித்ராவின் தகப்பனார் . எதிரி தெய்வேந்திரன் சித்ராவின் தம்பி . மற்ற எதிரிகள் கூலிப்படையினர் . சம்பவத்திற்கு முன்பு சித்ராவின் தம்பி மகேந்திரன் என் தம்பி செல்லப்பாண்டியை அவரது வீட்டிற்கு வந்து அடித்துவிட்டார் . காவல் நிலையத்தில் மகேந்திரனின் மீது புகார் கொடுத்து வழக்கு நிலுவையில் இருந்தது . என் தம்பி செல்லப்பாண்டியை சம்பவத்திற்கு 6 மாதத்திற்கு முன்பு இருந்து காணவில்லை. நாங்கள் அக்கம் பக்கம் தேடிப்பார்த்தோம் . தகவல் இல்லை . சித்ராவின் வீட்டிற்கு கடமலைக்குண்டுவிற்கு சென்றோம் . சித்ராவின் தகப்பனார் மகாராஜனும், சித்ராவும் வீட்டில் இருந்தனர் . செல்லப்பாண்டி பொங்களுக்கும் , தீபாவளி பண்டிகைக்கும் வரவில்லை எங்கே போய்விட்டான் என்று கேட்டோம் . இருவரும் செல்லப்பாண்டி வேலைக்கு சென்றிருப்பதாகவும் , வேலையை முடித்துவிட்டு வந்துவிடுவார் என்று சொன்னார்கள் . காவல் நிலையத்தில் புகார்

கொடுக்கவேண்டும் என்று சொன்னோம் . எதிரி மகாராஜன் செல்லப்பாண்டி என்ன சின்னப்பிள்ளையா வந்துவிடுவார் என்று சொன்னார்கள் . நாங்கள் திருப்தி அடையவில்லை. கடந்த 23.02.2020 ம் தேதி என் தம்பி ராமராஜை கூட்டிக்கொண்டு கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் . கடந்த 29.02.2020 ம் தேதி காலை 4.00 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து என் தம்பி ராமராஜ்க்கு கைபேசியில் தகவல் சொன்னார்கள் . மகாராஜன், கூலி ஆட்களை வைத்து என் தம்பி செல்லப்பாண்டியை கொலை செய்துவிட்டதாக மயிலாடும்பாறை கிராம நிர்வாக அதிகாரியிடம் சரணடைந்திருப்பதாக கூறியதாக தெரிந்துகொண்டேன் . கொலை செய்த நபர்கள் அன்பு கணேஷ் என்பவரும் , செந்தில் என்பவரும் தேனி ராஜா லாட்ஜில் இருப்பதாகவும் , அவர்களை கூட்டிக்கொண்டு இராமநாட்டுக்கு வந்துவிடுவதாக சொல்லியிருக்கிறார் . என் தம்பி செல்லப்பாண்டியை கொலை செய்து ராமநாட்டில் புதைத்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள் . நானும், எனது உறவினர்களும் ராமநாட்டிற்கு சென்றோம் . கைபேசியில் காவல் ஆய்வாளரை தொடர்பு கொண்டோம் . காவல் ஆய்வாளர் உச்சிப்புளிக்கு வரச்சொன்னார் . உச்சிப்புளிக்கு சென்றோம் . என் தங்கை ஈஸ்வரி , செல்வி, ராமராஜ் ஆகியோரை காவல் ஆய்வாளர் பனங்காட்டு வழியே ஒரு இடத்திற்கு கூட்டிச்சென்றார் . அங்கு காவல் ஆய்வாளரும் , நான்கு நபர்களும் இருந்தனர் . அன்பு கணேஷ் , செந்தில், கிஷோர், தினேஷ் ஆகியோர் இருந்தனர் . எதிரி கிஷோர் காவல் ஆய்வாளரிடம் எதிரி சக்திவேல் என்பவர் என் தம்பி செல்லப்பாண்டியை அழைத்துக்கொண்டுவந்து இராமநாட்டில் விட்டதாகவும் , எதிரிகள் நான்கு போரும் 5 லட்சத்தை பெற்றுக்கொண்டு என் தம்பி செல்லப்பாண்டியை கொலை செய்ததாகவும் , நாகராஜ்க்கு போன்போட்டு சீனியும் , பெட்ரோலை வாங்கி வரச்சொல்லி , கிஷோரும், நாகராஜும் குழிதோண்டி பிரேதத்தை குழியில் போட்டு பெட்ரோல் , சீனியை போட்டு எரித்துவிட்டதாக சொன்னார்கள். கிஷோர் புதைத்த இடத்தை காட்டி தோண்டச்சொன்னார். காவல் ஆய்வாளர் , தாசில்தார், மருத்துவர், கிராம நிர்வாக அதிகாரியை அங்கு வரவழைத்தார் . ஜே.சி.பி இயந்திரத்தின் உதவியால் அந்த இடத்தை தோண்டினார்கள் . அழுகிப்போன நிலையில் பிரேதம் இருந்தது . மருத்துவர் எலும்புத்துண்டுகளை எடுத்துக்கொண்டார் . மருத்துவர் சமயச்சடங்கு செய்ய

எங்களிடம் எலும்புத்துண்டுகளை கொடுத்தார் . உச்சிப்புளியில் எலும்பை எரித்து எங்களது பழக்கவழக்கப்படி சாம்பலை கடலில் கரைத்தோம் . பிறகு நானும், என் உறவினர்களும் வீட்டிற்கு வந்துவிட்டோம் . பிறகு கடந்த 20.03.2020ம் தேதி ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தார் . நான் நடந்த விபரத்தை நீதித்துறை நடுவரிடம் கூறியிருக்கிறேன் . காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** – மனுவின்மீது நிறுத்திவைக்கப்பட்டது.

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டது . அவரால் சரி என் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது |
| கூடுதல் மாவட்ட விரைவு நீதிபதி<br>தேனி |